மலர் 1 இதழ் 1 ஜுலை, 2016 ISSN : 2454-3993

# மாணிக்கவாசகரின் சொல்லாட்சித்திறன்: ஒரு பார்வை

**உ. நிர்மலா**
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
ஏ,வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி,
சேலம்.

**முன்னுரை**

சொல்லுதற்கரியவனான இறைவனை சொல்லில் வடித்துணர்த்த எழுதப்பட்டதே திருவாசகம். எந்த ஒரு இலக்கியமாக இருந்தாலும் அதனைச் சிறப்படையச் செய்வது அதன் சொல்லாட்சியே ஆகும். சொற்கள் சரிவர பயன்படுத்தப்படவில்லையெனில் கருத்துக்கள் தம் வலிமையை இழக்கக்கூடிய பேராபத்தும் உள்ளது. சொல்லும், பொருளும் சேர்ந்தே இலக்கியத்தை அழகுற மிளிரச் செய்கின்றன. சங்க காலம் தொட்டு இக்கால இலக்கியம் வரை அதன் அழகினை பொலிவினை, சிறப்பனை, கருத்தினை நமக்கு எடுத்துரைப்பவை அதன் சொற்களே எனில் அது மிகையாகாது. சங்க காலப் புலவர் முதல் இக்கால கவிஞர் வரை எழுத்தாளர்களின் சிறப்பினை உலகறியச் செய்வது அவர்தம் சொற்களே! எனவே மாணிக்கவாசகரின் சொற்களை ஆளும் திறன் எங்ஙனம் இலக்கியத்தில் மிளிர்கின்றது என ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சொல்**

மொழியின் அடிப்படைக் கூறுகளில் சொல் ஒன்றாகும். கருத்துப் பரிமாற்றத்தில் செய்யுள் அமைப்பில் முக்கியமானவை சொற்கள். மொழி பயன்பாட்டில் சொல் தேர்வு இன்றியமையாததாகிறது. நடைமுறை வாழ்விலும் சொற்கள் மிக இன்றியமையாதவை என்பதை

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு"**

என வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார்.

**திருவாசகத்தில் சொல்**

திருவாசகத்தில் சிவனை மையப்படுத்தியே அனைத்துச் சொல்லாட்சிகளும் அமைந்துள்ளன. சிவனை வர்ணித்தும், புகழ்ந்தும், சிறப்புகளை எடுத்துக்கூறியும் எனப் பல்வேறு வடிவங்களில் மாணிக்கவாசகர் சொல்லாட்சித் திறனை கையாண்டுள்ளார். பேச்சுச் சூழல், சமுதாயச் சூழல் போன்றவற்றிற்கேற்ப சொற்தேர்வு அமையும், அத்தகு சுழலில் கருப்பொருள் மட்டுமே சொற்தேர்வினைக் கட்டுப்படுத்துகின்றன.

**மாணிக்கவாசகரின் சொல்லாட்சித் திறன்**

திருவாசகத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் செய்யும் சொல்லமைப்புக்கு ஏற்ப பாவகைகள் அமைந்துள்ளன. ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும், வெண்பாவிலும் செம்மையுறச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு புராணச் செய்திகளும், மாணிக்கவாசகரின் அனுபவங்களும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

நாட்டுப்புறப்பாடல் வடிவங்களையும் கையாளத் தவறவில்லை மாணிக்கவாசகர். திருஅம்மானை திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருத்தோள் நோக்கம், திருப்பொன்னூஞ்சல் ஆகிய பதிகங்களில் இதனை உணர முடிகிறது.

**“தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்**
**ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்”(திருவாசகம்–திருஅம்மானை)**

**“ஊனாருடை தலையில் உண்பலிதேர் அம்பலவன்**
**தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பி” (திருவாசகம் – திருக்கோத்தும்பி)**

**“நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து**
**சிவமாய வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ” (திருவாசகம் – திருத்தொள்ளேணம்)**

எனப் பாடல்களின் இறுதியில் ஒரு பதிகம் முழுவதும் ஒரே சொல்லைப் பயன்படுத்தும் திறன் அழகு.

அதே போன்று திருஉந்தியார் பதிகத்தில் “உந்திபற”, “உந்தீபற” எனும் சொலலாட்சியும் படிப்பவர் மனதில் என்றும் நிலைத்திருக்கும் தன்மையுடையதாகும்.

**“நல்ல மலரின் மேல் நான்முக னார் தலை**
**ஒல்லை யரிந்ததென் றுந்தீபற**
**உகிரால் அரிந்ததென் றுந்தீபற**
**தேரை நிறுத்தி மலையெடுத் தான் சிரம்**
**ஈரைந்தும் இற்றவா றுந்தீபற**
**இருபதும், இற்றதென் றுந்தீபறு” (திருவாசம் – திரு உந்தியார்)**

இவ்வாறு பல பதிகங்களில் இறுதி சொல் அமைப்பானது மனதில் பதியும் வகையில் உளவியல்ரீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

உரையாடல் நடையும் மிகச் சிறப்பாக மாணிக்கவாசகரால் கையாளப்பட்டுள்ளது. திருச்சாழல் பகுதி முழுவதும் உரையாடல் நடையே உள்ளது. சாழல் என்பது ஒரு வகை விளையாட்டு.

**“கோயில் சுடுகாடு கொல்புலித்தோல்**
**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேனடீ**
**தாயுமலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினுங்**
**காயில் உலகனைத்தும் கற்பொடி காண் சாழலோ”**
**என்றும் (திருவாசகம்–திருச்சாழல்)**
**“மலைமகளையொடு பாகம் வைத்தலுமே மற்றொருத்தி**
**சலமுகத்தாய் அவன் சடையிற் பாயுமது என்னேடீ?**
**சலமுகத்தால் அவன் சடையில் பாய்ந்திலனேன் தரணியெல்லாம்”**

என்று தோழியும், தலையியும் உரையாடுவதாக பாடலைப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் கேள்வியும் கேட்டு பதில் சொல்லும் இத்தகைய சொல்லாடல் நடை சாதாரணமாக பேசும் நாட்டுப்புற நடையைப் போல் அமைந்துள்ளது சிறப்புடையது.

திருவாசகத்தில் மாணிக்கவாசகரால் அழகான பேச்சு நடைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது இன்புறத்தக்கதாகும். ‘வந்து’ எனும் சொல்லும் புகுந்து எனும் சொல்லும் திருவாதவூரால் எங்ஙனம் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் காண்போம்.

**"கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்து எய்தி"**
**"நிலந்தன்மேல் வந்து அருளி"**
**"அருபரத்து ஒருவன் அவனியில் வந்து"**
**"கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கருணையினால்"**
**நிற்பானைப் போலான் நெஞ்சினுள்ளே புகுந்தருளி"**

**"அன்பாலைப் பிறப்பறுந்திங்**
**கிமையவர்க்கும் அறியவொண்ணாத்**
**தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுந் சிவபெருமான்**
**அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி"**

எனச் சிவன் இந்த அவனிக்கு வந்தான். நமக்கு எளியவனாக வந்தான். தன் தொழும்பில் கொள்ள வந்தான். அடியோரைக் கண்ணாரக் காண வந்தான். தனி உருவம் கொண்டு வந்தான். உத்தமனர் வந்தான், நிலந்தன் மேல் வந்தருளினான். இவ்வாறே எண்ணும்போது இனிக்குமாறு வருகின்றான் இறைவன் என நம்மை உணரவைக்கின்றன பாடல்கள் எனில் அதற்குக் காரணம் மாணிக்கவாசகரின் சொல்லாட்சித் திறனே ஆகும்.

மாணிக்கவாசகரின் சொல்லாட்சித் திறனுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு அவர் இறைவனின் புகழைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகும் வார்த்தைகளில் உணரலாம்.

உலக வாழ்க்கை நிலையில்லாதது, மனிதன் துன்பத்தை சந்திக்கும் போது தவறு செய்ய நினைக்கிறான். மனஉறுதி தளர்கிறது. மனம் மயங்கி வேறு வழியில் செல்லத் தொடங்குகிறான். இப்படியாக வாழ்க்கைக் காட்டில் இன்பவெளியை நாடிப் பயணம் போகின்ற மனிதனுக்கு உள்ளத் தளர்ச்சியும், துன்பங்களும் இடையூறாக அமைகின்றன. அத்தகைய சூழலில் உற்ற துணை ஒன்று தேவையாக உள்ளது. அந்தத் துணையே இறைவன் ஆவார்.

**"முன்னோன் காண்க முழுநோன் காண்க**
**தன்னேர் இல்லோன் தாளே காண்க**
**ஏனம் தொல் எயிறு அணிந்தோன் காண்க**
**கானம் புலி உரி அரையோன் காண்க**
**நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்" (திருவண்டம்–திருவாசகம்)**

இதேபோல் குறைவின்றி அனைத்திலும் நிறைந்திருக்கும் இறைனை பல்வேறு சொற்களால் வருணித்தும் இப்பகுதியில் வாழ்த்துகிறார்.

**"கரும் பணக் கச்சைக் கடவுள் வாழ்க**
**அரும் தவர்க்கு அருளும் ஆதி வாழ்க**
**அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க**
**நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க**
**சூழ்இருள் துன்பம் துடைப்போன் வாழ்க**
**எய்தினார்க்கு ஆர் அமது அளிப்போன் வாழ்க!"**

ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல், வியப்புச் சொற்கள், அடுக்குத் தொடர்கள் என மாணிக்கவாசகர் சொற்களை பயன்படுத்தியிருப்பது படித்து இன்புறத்தக்கத்தாகும்.

நூலுக்குரிய அழகுகளாக நன்னூல் குறிப்பிடுவது பின்வருமாறு:

**"சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்**
**நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல்**
**ஓசையுடைமை, ஆழம் உடைத்தாதல்**
**முறையின் வைப்பே, உலகமலை யாமை**
**விழுமியது பயத்தால், விளக்கு உதாரணத்து**
**ஆகுழல் நூலிற்கு அழகடினும் பந்தே" (நன்னூல், எழுத்து)**

பத்து அழகுகளும் மாணிக்கவாசகரின் சொற்களில் மிளிரக் காணலாம். மாணிக்கவாசகரின் சொல்லாட்சித் திறன் மிகத் தெளிவாகப் பாடல்கள் புனைவில் வெளிப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. ஏ.எ.வழித்துணைராமன், திருவாசகம்.
2. தமிழண்ணல், புதிய நோக்கில் திருவாசகம்.
3. நன்னூல் (எழுத்து)